



# மக்களுக்காக உழைக்கக் கூடிய அரசாக, ‘திராவிட மாடல்’ அரசு திகழ்கிறது!

## நாமக்கல்லில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உரை!

**நாமக்கல், ஜூலை 12-**

**நாமக்கல் மாவட்டத்தில் நடைபெற்ற நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில், 2,000 பயனாளிகளுக்கு சுமார் ரூ.40 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பயனாளிகளுக்கு நேற்று முன்தினம் வழங்கினார்.**

முன்னதாக விழாவில் ரூ.11.57 கோடி மதிப்பில் நிறைவுற்ற 39 பணிகளை திறந்து வைத்து, ரூ.89.22 கோடி மதிப்பில் 141 புதிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். விழாவில், வீட்டு மனைப் பட்டா வேண்டி கோரிக்கை விடுத்திருந்த 1601 பயனாளிகளுக்கு வீட்டுமனைப் பட்டாக்களை வழங்கி வாழ்த்துரை வழங்கினார்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய உரையின் விவரம் வருமாறு:

இன்றைக்கு நாமக்கல் மாவட்டத்தில் 2 ஆயிரம் பயனாளிகளுக்கு 40 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகள் வழங்குகின்ற நிகழ்ச்சியில் கலந்துகொண்டு உங்களை எல்லாம் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

கல்வி, தொழில், விவசாயம் என எல்லா வகையிலும் சிறந்து விளங்குகின்ற மாவட்டம் என்றால், அது இந்த நாமக்கல் மாவட்டம் என்பது கூடுதல் சிறப்பு. இந்த நிகழ்ச்சிக்குக்கூட ஏராளமான மகளிர்கள், மாற்றுத் திறனாளிகள், விவசாயிகள், விளையாட்டு வீரர்கள் வருகை தந்துள்ளீர்கள். ஆகவே, நம் அரசு எல்லோருக்குமான அரசு என்பதற்கு, இந்த ஒரு நிகழ்ச்சியே சாட்சி.

### 2 ஆயிரம் குடும்பங்கள்

இங்கு 2 ஆயிரம் பேருக்கு நாம் நலத்திட்ட உதவிகளைக் கொடுக்கிறோம் என்றால், 2 ஆயிரம் குடும்பங்கள் பயன்பெறுகிறார்கள் என்று அர்த்தம். நம் மாண்புமிகு முதலமைச்சரின் தலைமையில் தமிழ்நாடு இன்றைக்கு ஒட்டுமொத்த இந்தியாவுக்குமே வழிகாட்டிக்கொண்டு இருக்கிறது. குறிப்பாகச் சொல்ல வேண்டும் என்றால், மகளிர் முன்னேற்றத்தில் தமிழ்நாட்டின் பல திட்டங்களை, இன்றைக்கு இந்தியாவின் பல மாநிலங்கள் பின்பற்றிக்கொண்டு இருக்கின்றன. அதற்கு சில உதாரணங்களை இங்கு கூற விரும்புகிறேன்.

### 15 கோடியே 80 லட்சம் பயணங்கள்

ஆட்சிக்கு வந்தவுடன், நம் முதலமைச்சர் போட்ட முதல் கையெழுத்தே மகளிருக்கான கையெழுத்துதான். அதுதான் மகளிருக்கான விடியல் பயணம் திட்டம். இந்த விடியல் பயண திட்டத்தின் மூலம் நான்கு ஆண்டுகளில் மகளிர் தமிழ்நாடு முழுவதும் 730 கோடி பயணங்களை மேற்கொண்டு இருக்கிறார்கள். இந்த நாமக்கல் மாவட்டத்தில் மட்டும் 15 கோடியே 80 லட்சம் பயணங்களை மகளிர் மேற்கொண்டு இருக்கிறார்கள்.

### 40 ஆயிரம் மாணவர்கள்

புதுமைப்பெண், தமிழ்ப்புதல்வன் திட்டத்தின் மூலம் அரசு பள்ளியில் படித்து உயர்கல்வி படிக்கச் செல்லும் மாணவர்களுக்கும், மாணவிகளுக்கும் மாதம் ஆயிரம் ரூபாய் கல்வி ஊக்கத்தொகை வழங்குகிறது நம் அரசு. இப்படி வருடந்தோறும் 8 லட்சம் மாணவ, மாணவிகளுக்கு கல்வி



ஊக்கத்தொகையை நம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்குகிறார்கள். இந்த நாமக்கல் மாவட்டத்தில் மட்டும் புதுமைப்பெண், தமிழ்ப்புதல்வன் திட்டத்தின் மூலம் வருடந்தோறும் 40 ஆயிரம் மாணவ, மாணவிகள் பயன்பெற்று வருகிறார்கள்.

குழந்தைகள் பள்ளிக்கூடத்திற்குச் செல்ல வேண்டும் என்று நம் முதலமைச்சர் கொண்டு வந்த திட்டம்தான் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம். இந்த திட்டத்தின் மூலம் ஒவ்வொரு நாளும் 20 லட்சம் குழந்தைகள் தமிழ்நாடு முழுவதும் பயன்பெற்று வருகிறார்கள். இந்த நாமக்கல் மாவட்டத்தில் மட்டும் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தின் மூலம் கிட்டத்தட்ட 40 ஆயிரம் குழந்தைகள் பயன்பெற்று வருகிறார்கள்.

இது எல்லாவற்றிற்கும் மேலாக, எல்லோரும் திரும்பி பார்க்க வைத்த திட்டம்தான் கலைஞர் மகளிர் உரிமைத்தொகைத் திட்டம். இந்தத் திட்டத்தின் மூலம் கடந்த 22 மாதங்களாக ஒரு கோடியே 15 லட்சம் மகளிரிலிருந்து மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் கலைஞர் மகளிர் உரிமைத்தொகை வழங்கப்பட்டுள்ளது. இந்த நாமக்கல் மாவட்டத்தில் மட்டும் சுமார் 2 லட்சத்து 50 ஆயிரம் மகளிருக்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் நம் முதலமைச்சர் அவர்கள் கொடுத்து இருக்கிறார்கள்.

இந்தத் திட்டத்தில் புதிதாக விண்ணப்பிக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதற்கான விதிகளையும் நம் முதலமைச்சர் அவர்கள் தளர்த்தி இருக்கிறார்கள். இப்படி உங்களுக்காக உழைக்கக்கூடிய அரசாக, நம் முதலமைச்சர் தலைமையிலான அரசு திகழ்ந்துகொண்டு இருக்கிறது.

### பட்டா எனும் கனவு

இந்த நிகழ்ச்சியில் மட்டும் 1,700 பேருக்கு வீட்டுமனைப் பட்டாக்களைக் கொடுக்க இருக்கிறோம். இதன் மூலம் பட்டா எனும் உங்களின் சட்டப்பூர்வ உரிமையை நம் அரசு நிலைநாட்டியுள்ளது. நம் முதலமைச்சர் அவர்களைப் பொறுத்தவரைக்கும் தமிழ்நாடு எங்கும் எல்லோருக்கும் எளிதாக பட்டா கிடைக்க வேண்டும் என்பதுதான் அவரின் ஒரே குறிக்கோள், ஒரே எண்ணம். அதற்காக அமைச்சரவையைக் கூட்டி பட்டா வழங்குவதில் உள்ள பிரச்சினைகள், சின்ன சின்ன இடர்களை எல்லாம் நீக்க வேண்டும் என்று முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார். அதன் தொடர்ச்சியாகத்தான் உங்களின் பட்டா எனும் கனவு இன்றைக்கு நனவாக்கப்பட்டு இருக்கிறது.

இந்த நாமக்கல் மாவட்டத்திற்கென்று நம் அரசு, நம் முதலமைச்சர் அவர்கள் ஏராளமான திட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறார். அவற்றில் ஓரிரண்டு திட்டங்களை மட்டும் உங்களுக்கு நினைவுப்படுத்த விரும்புகிறேன்.

### சாலை வசதிகள்

சுமார் 200 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நாமக்கல் சுற்றுவட்டச் சாலை, முதல்முறையாக போதமலை மலைக் கிராமத்திற்கு 140 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சாலை வசதி, 33 ஆண்டுகளுக்குப் பிறகு சேலம் மத்திய கூட்டுறவு வங்கி, நாமக்கல் கூட்டுறவு வங்கியாகப் பிரிக்கப்பட்டது. 90 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஆவின் ஹைடெக் பால் பண்ணை, விளையாட்டு மேம்பாட்டுத்துறையின் சார்பாக நாமக்கல், இராசிபுரம், சேந்தமங்கலம் என மூன்று சட்டமன்றத் தொகுதிகளில் முதலமைச்சரின் மினி ஸ்டேடியம் அமைக்கப்பட உள்ளன. இப்படிப் பல நடவடிக்கைகளை முதலமைச்சர் அவர்கள் எடுத்து இருக்கிறார். இன்னும் பல சாதனைகளைச் சொல்லிக்கொண்டே போகலாம்.

அதன் தொடர்ச்சியாகத்தான் இந்த விழா மேடையில், 90 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற உள்ள 141 புதிய மனைகளுக்கு அடிக்கல் நாட்டியுள்ளோம். அதேபோல், சுமார் 12 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பணி நிறைவடைந்த பணிகளைத் திறந்து வைத்து இருக்கிறோம். ஆகவே, நாமக்கல் மாவட்டத்திற்கும், இந்த மாவட்ட மக்களுக்கும் நம் அரசும், முதலமைச்சர் அவர்களும் என்றைக்கும் துணை நிற்பார்கள். ஆகவே, நீங்களும் இந்த அரசுக்கும், முதலமைச்சருக்கும் துணை நிற்க வேண்டும் என்று கூறிக்கொண்டு, இந்த அரசின் திட்டங்களை நீங்கள் நான்கு பேருக்கு எடுத்துச் சொல்லி, இந்த அரசின் தூதுவர்களாக, பிராண்ட் அம்பாசிடர்களாக நீங்கள் அத்தனைப் பேரும் செயல்பட வேண்டும் என்று கூறிக்கொண்டு, இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

இவ்வாறு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பேசினார்.

### பங்கேற்றவர்கள்

அமைச்சர்கள் ராஜேந்திரன், மதிவேந்தன், மாநிலங்களவை உறுப்பினர் ராஜேஷ்குமார், நாடாளுமன்ற உறுப்பினர்கள் பிரகாஷ், மாதேஷ்வரன், சட்டமன்ற உறுப்பினர்கள் இராமலிங்கம், பொன்னுசாமி, மாவட்ட ஆட்சித் தலைவர் துர்கா மூர்த்தி ஐ.ஏ.எஸ்., மாநகர மேயர் கலாநிதி, துணை மேயர் பூபதி, மாவட்ட வருவாய் அலுவலர் மருத்துவர் சுமன், நாமக்கல் மேற்கு மாவட்ட கழகப் பொறுப்பாளர் கே.எஸ்.மூர்த்தி உள்ளிட்ட கழக முன்னணியினர் மற்றும் பயனாளிகள் உள்பட பலரும் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (10.7.2025) நாமக்கல் மாவட்ட விளையாட்டரங்கில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில் 40.00 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள நவீன உடற்பயிற்சி கூடத்தில் விளையாட்டு வீராங்கனைகள் பயிற்சியில் ஈடுபடுவதை பார்வையிட்டு கலந்துரையாடினார். இந்நிகழ்வில் சுற்றுலாத் துறை அமைச்சர் ஆர்.ராஜேந்திரன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி., கே.இ.பிரகாஷ், சட்டமன்ற உறுப்பினர்கள் பெ.ராமலிங்கம், கு.பொன்னுசாமி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி துர்காமூர்த்தி, மாநகராட்சி மேயர் து.கலாநிதி உள்பட அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (10.7.2025) நாமக்கல் மாவட்ட விளையாட்டரங்கில் செயல்பட்டு வரும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மாணவிகள் விடுதியில் விளையாட்டு வீராங்கனைகளுடன் கலந்துரையாடினார்.







தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இராசிபுரம் திருவள்ளுவர் அரசு கலைக் கல்லூரி வளாகத்தில் உள்ள கல்லூரி மாணவிகளுக்கான சமூக நீதி விடுதிக்கு நேரில் சென்று மாணவிகளிடம் அவர்கள் பயிலும் கல்வி குறித்து கலந்துரையாடி குழு புகைப்படம் எடுத்துக் கொண்டார்.